IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.64/2026

DEPOSITION OF WITNESS P.W.6

| | | |
|---|---|---|
| NAME | : | SURIYA |
| HUSBAND'S NAME | : | SATHISH |
| VILLAGE | : | BAGAYAM |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 02ND day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சிங்கப்பெண் சிறப்புபடை பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.02.2026 ம் தேதி பிரம்மபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது வேலூர் பெண்ட்லேண்ட் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற மருத்துவ தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்க்க மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மனோகரன் த/பெ சண்முகம் என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.21/2026 சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1) BNS மற்றும் 4 TNPHW Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கையையும், புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.02.2026 ம் தேதி மாலை 16.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பூபாலன், அய்யப்பன் ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அது முறையே **அ.சா.ஆ.5** மற்றும் **அ,சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் பூபாலன், அய்யப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் வழக்கில் காயம்பட்ட புகார்தாரர் மனோகரன் மற்றும் விஜயலட்சுமி 19.02.2026 ம் தேதி வேலூர் பெண்ட்லேண்ட் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மருத்துவர் சுஜிதா என்பவர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். அந்த காயச்சான்றுகள் முறையே **அ.சா.ஆ.7** மற்றும் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் நான் புலன் விசாரணை மேற்கொண்டதில் மேற்படி மூங்கில் கொம்பை எதிரிகள் சம்பவ இடத்திலிருந்து போகும்போது தன்னுடன் எடுத்து சென்று போகும் வழியில் எங்கோ தூக்கி எறிந்து விட்டதாகவும், எங்கு எறிந்தார் என்று தெரியாது என்று எதிரிகள் மூவரும் தெரிவித்துள்ளார்கள். எனவே வழக்கு சொத்தினை கைப்பற்ற இயலவில்லை என்பதை தனி அறிக்கை மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். அந்த தனி அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் சாட்சிகள் மனோகரன், விஜயலட்சுமி, அருண்குமார், லோகேஷ், பூபாலன், அய்யப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது 296(b), 118(1) BNS மற்றும் 4 of TNPHW Act ன் படி 20.02.2026 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எதிரிகள் புகார்தாரர் மீது புகார் கொடுத்து அந்த வழக்கில் நான் தான் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். சம்பவம் 11 மணிக்கு நடந்ததாக புகார்தாரர் கூறி உள்ளார். புகார் கொடுக்கும் போது புகார் தாரர் சுயநினைவுடன் இருந்தால் என்றால் சரிதான். அ்சா்1 விசாரிக்கும் போது அவர்மேல் மிளகாய் பொடி இல்லை. அதே மருத்துவமனையில் முதல் மற்றும் இரண்டாம் எதிரி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தார் என்றால் சரிதான். அப்போது 2ம் எதிரிக்கு தலையில் வெட்டுகாயம் பெற்று இருந்தது என்றால் சரிதான். அ.சா.2 யை அடித்த கொம்பின் அளவு மற்றும் நீளம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.3 சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் 11 மணிக்கே வந்து விட்டார். அ.சா.3யை விசாரிக்கவில்லை என்றும், அவர் உறவினர் என்ற முறையில் பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் விநாயகம் வீட்டில் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடைபெறவில்லை என்றும், புகார்தாரர் மற்றும் அவர் மனைவி சேர்ந்து தான் எதிரிகளை தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும், நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் அக்கம்பக்கத்தினரை சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 02.07.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU — Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.